2014 ஜூலை 25]

தங்கத் தாரகையாக, காவேரியை மீட்டுத் தந்த காவியத் தலைவியாக (மேசையைத் தட்டும் ஒலி) மடிக் கணினி தந்து மாணவர்களுக்கு மகுடம் சூடவைத்த தாயாக, தாலிக்குத் தங்கம் தந்து தாய்க்குத் தாயாக, ஏழைகளின் பசி போக்க மலிவு விலை உணவு தந்து மாதரசியாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி பறக்கும் இரயில் நிலையத்தின் மேல் சுமார் 40 கோடி ரூபாய் செலவில் 1,11,000 சதுர அடி பரப்பில் இரண்டு தளம் கொண்ட அலுவலக வளாகம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்தப் பகுதிகளில் மரக் கன்றுகள் நடுவேன் என்பதை அறிவித்த அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

267—

சுற்றுச்சூழல் பாதிப்பு

***44568—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்னணுக் கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அறிவிக்கையின்படி மின்னணுக் கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2011-ல் வெளியிடப்பட்டு, 2012 ஆம் ஆண்டு மே 1 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் 12-9-2013-ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினிகள், மடிக் கணினிகள், இன்னிசைக் கருவிகள், cell phones, cameras, pen drives போன்றவை மின்னணுக் கழிவாக e-waste ஆகக் கருதப்படுகின்றன. மும்பை, புது டில்லி, பெங்களூருக்கு அடுத்ததாக சென்னையிலே ஆண்டொன்றுக்கு 47,000 டன் மின்னணுக் கழிவுகள் கிடைப்பதாக ASSOCHAM என்ற Associated Chambers of Commerce and Industries அறிவித்திருக்கிறது. இதில் டி.வி.-க்கள், கணினிகள் மற்றும் மொபைல் போன்கள் 26,183 டன் சென்னையில் கழிவுகளாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கழிவுகளிலே நச்சுத் தன்மையுள்ள காரீயம், பாதரசம், குரோமியம் போன்ற உலோகங்கள் இருக்கின்றன. இந்த உலோகங்கள் கழிவாக ஆகும்போது மனிதர்களுக்குப் புற்று நோய், நரம்புத் தளர்ச்சி, கண் பார்வைக் குறைபாடு போன்ற பல்வேறு உபாதைகள் ஏற்படுகின்றன. விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. மண்ணையும், நீரையும், காற்றையும் மாசுபடச் செய்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல e-waste (Management and Handling) Rules, 2011-படி இந்த மின்னணுப் பொருட்களைத் தயாரிக்கக்கூடியவர்களுக்கு உருவாக்கப்பட்ட தயாரிப்பாளர் பொறுப்புடைமை, அதாவது Extended Producer Responsibility என்று ஒன்று இருக்கிறது. இந்த விதியின்படி இந்த மின்னணு பொருட்களைத் தயாரிக்கக்கூடிய தயாரிப்பாளர்கள் அது பயன்பாடு முடிவடைந்தபிறகு அதற்கான Collection Centre-சேகரிப்பு நிறுவனத்தை அமைக்க வேண்டும்.

2014 ஜூலை 25]

அதேபோன்று, dismantling, அதைப் பிரிப்பதற்கும் மற்றும் recycle செய்வதற்கும் அந்த விதிகளிலே இடம் இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழக அரசு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று வினவுகின்றேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, e-waste என்று சொல்லக்கூடிய மின்னணுக் கழிவில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் இருக்கும்பொருட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகளுக்கு மின்னணுக் கழிவுகளைச் சேகரித்து பிரித்தெடுப்பதற்காக, மின்னணுக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2011-ன்கீழ் உரிய அனுமதி வழங்கி வருகிறது. இதுவரை மேற்கண்ட விதியின்கீழ், 16 தொழிற்சாலைகளுக்கு மின்னணுக் கழிவுகளைப் பொதுமக்களிடமிருந்தும் மற்றும் நிறுவனங்களிடமிருந்து சேகரிப்பதற்கும், மின்னணுக் கழிவு உதிரிப்பாகங்களைத் தனித்தனியாக பிரித்தெடுத்து மறு சுழற்சி செய்யும் தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதற்கும், அங்கீகாரம் மற்றும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அருகிலே சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள திருவாளர் TES-AMM Recyclers (India) Private Limited என்ற தனியார் நிறுவனம் முறையான அனுமதி பெற்று மின்னணுக் கழிவுகளை மறு சுழற்சி செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்னணுக் கழிவுகளைப் பொதுமக்களிடம் மற்றும் நிறுவனங்களிடமிருந்தும் சேகரித்து மறு சுழற்சி நிலையங்களுக்கும் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அனுப்பிவைக்கும் பொருட்டு 7 சேகரிக்கும் மையங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஒவ்வொரு மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளிலே, ஒவ்வொரு வார்டிலும் இதுபோன்ற மின்னணுக் கழிவுகளைச் சேகரிப்பதற்காக வேண்டி சுற்றுச்சூழல் துறை, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தி கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் மூலமாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலே குப்பைகளைப் பிரித்தெடுக்கின்றபோது, அந்தக் குப்பைகளிலிருந்து பிளாஸ்டிக் கழிவுகளைத் தனியாகவும், மின்னணுக் கழிவுகளைத் தனியாகவும், பிரித்தெடுக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, உள்ளாட்சித் துறையின்மூலம் குப்பைகளைப் பிரித்தெடுத்து சேகரித்து வைப்பதற்கு உள்ளாட்சிகளுக்கு bin என்று சொல்லக்கூடிய தனித் தனிப் பெட்டிகளை வழங்குவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து அந்தக் குப்பைகளைத் தனித் தனியாக பிரித்தெடுத்து அனுப்புகிற திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி வருகிறது. சுற்றுச்சூழல் துறைமூலம் மின்னணுக் கழிவுகளை மட்டுமல்ல, நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்மூலம் தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனைக் கழிவுகளையும் அகற்றி, அரசியல் சூழலையும் இப்போது மாற்றிக்காட்டியிருக்கின்ற முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சுற்றுச்சூழல் துறையைப் பொறுத்தவரையிலே இப்போது இந்தியாவிலேயே சுற்றுச்சூழலை நல்லமுறையில் பாதுகாக்கின்ற மாநிலம் தமிழகம்தான் என்று சொல்லக்கூடிய வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்வகையில்

2014 ஜூலை 25]

நல்ல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 268 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

269—

ஆரம்ப சுகாதார நிலையம்

***1125—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் ஊராட்சி ஒன்றியம், மூக்கனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

வினா எழுப்பி மன்றத்தில் விடையளிக்கும் முன்னரே, மக்கள் கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றும்வண்ணமாக, இன்னும் சொல்லப்போனால், மணியோசை கேட்டு மக்கள் குறை தீர்த்த மனுநீதிச் சோழனையும் தாண்டி, மக்கள் மன ஓசை கேட்டு மக்கள் குறை தீர்ப்பவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவினாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், மூக்கனூர் மக்கள் மனம் குளிரும் வகையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசாணை வழங்கப்பட்டு, 21-2-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களாலே திறந்துவைக்கப்பட்டு,